தாலி அறுப்பா? அவிழ்ப்பா?

டிசம்பர் 7ம் திகதி வெளிவந்த ஒரு பேப்பர் ரின் 83வது இதழில் ஜேர்மனிக்கான எமது செய்தி யாளர்களில் ஒருவரான திருமதி. சாந்தி ரமேஸ் வவுனியன் எழுதிய 'தாலி பெண்ணுக்கு வேலியா சோலியா?' என்ற கட்டுரையை பிர சுரித்திருந்தோம்.

இக்கட்டுரை தொடர்பாக தமது அதிருப் தியை ஜேர்மனியை சேர்ந்த திருமதி சுதானந் தன் அவர்கள் எமக்கு கடிதம் மூலம் தெரி வித்திருந்தார். அக்கடிதத்தினையும், அது தொடர்பில் சாந்தியினது விளக்கத்தையும் இங்கு பிரசுரிக்கிறோம்

- ஆசிரியர்

திருமதி சதானந்தனின் கடிதம்

சென்ற நவம்பர் மாதம் ஒரு பேப்பர் என்னும் பத்திரிகையில் வெளிவந்த 'தாலி அறுப்பும் கூறை பறிப்பும்' என்ற கட்டுரையை அதில் தொடர்புடைய பாதிக்கப்பட்ட பெண்ணான நான் கூறுகிறேன். உண்மையில் அக்கட்டு ரையை வாசித்ததும் மிகவும் அதிர்ச்சி அடைந் தேன். அக் கட்டுரையில் இடம் பெற்ற சம்பவ ங்கள் அனைத்தும் எனது கணவரின் இறுதி க் கிரியைகளில் நடைபெறவில்லை. இந் நிகழ் வானது சாந்தி ரமேஷ் வவுனியன் என்பவரால் பொய்யாக வெளியிடப்பட்டது. தனது சொந்த பகமை காரணமாகவும் தனது சொந்த பழி வாங்கல் காரணமாகவும் அக்கட்டுரையை எழுதியுள்ளார். அவரை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

ஒரு மனிதர் இறந்த பின் அதற்கான கிரியை களை எமது இந்து கலாச்சார முறைப்படி எப்படி நடத்தி முடிக்கிறார்களோ அவ்வாறே நானும் எனது கணவரின் இறுதிக்கிரியைகளை நடத்தி முடித்தேன். இதை நான் எவரின் திணிப்பிலோ அல்லது எவரின் வற்புறுத்தலினாலேயோ செய்யவில்லை என்பதை ஆணித்தரமாகக் கூறவிரும்புகிறேன்.

தனது கணவன் இறந்த பின் ஒரு மனைவியானவள் தனது தாலியையும், கூறை யையும் கழற்றி வைப்பதுண்டு. தாலியை கழட்டும் போது சிரித்த முகத்துடனோ அல்லது புன்னகையுடனோ கழட்டி வைப்பதில்லை தனது மனக்குமுறலை வெளிவார்த்தைகள் மூலம் கதறியழுதே அதை செய்வதுண்டு. அதனை விளங்காமல் அக்கட்டுரையை எழுதியவர் எழுதியுள்ளார்.

இந் நிகழ்வினை சாந்தி ரமேஷ் வவுனியன் என்பவர் மற்றவர்களால் அது கட்டாயத்தின் பேரில் கழட்டப்பட்டதாக பொய்க்கட்டுரை எழுதி யுள்ளார். அதில் எந்த உண்மையுமில்லை. எனது நண்பிகளை தனது சொந்தப் பிரச்சினை காரணமாக பழிவாங்கும் நோக்கத்துடனேயே எனது கணவரின் மரணவீட்டில் எடுத்த முயற் சியே அது. தயவு செய்து பழிவாங்கும் படலங் களை இப்படியான நிகழ்வுகளில் நிகழ்த்த வேண்டாம் என அக்கட்டுரை எழுதியவருக்கு கூற விரும்புகிறேன்.

தயவு செய்து பத்திரிகை ஆசிரியர்களுக்கு ஒரு விண்ணப்பம். இப்படியான கட்டுரைகள் உண்மையில் நடந்த நிகழ்வுகளா என்பதனை சம்பந்தப்பட்டவர்களிடம் அறிந்த பின்னரே அக்கட்டுரைகளை பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

- திருமதி சுதானந்தன்

சாந்தி ரமேஷ் வவுனியனின் விளக்கம்

எனது கட்டுரை தொடர்பாக தனது மறுப் பினை ஜேர்மனியை முகவரியாகக் கொண்ட திருமதி. சுதானந்தன் என்பவர் எழுதியுள்ளார். அக்கடிதத்தை திரு. எஸ். மகேசன் என்பவர் பிரித்தானியாவிலிருந்து பதிவுத்தபாலில் ஒரு பேப்பர் ருக்கு அனுப்பி வைத்துள்ளார். அவ்விருவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது கட்டுரையை வைத்துப் பலவாறான சர்ச்சைகளும் மிரட்டல்களும், கொலை அச்சு றுத்தல்களும் எனது வீட்டுக்கதவு வரை வந்தி ருந்தன. தாலிகழற்றிவைப்பு என்பது எமது பண் பாடு, அந்தப்பண்பாட்டை மீறுவோர் தண்டனை க்குரியோர், இந்தப் பண்பாட்டு மீறலை நியாயப்படுத்தி எழுதிய நானும் அதனை வெளியிட்ட ஒரு பேப்பர் ரும் தண்டிக்கப்படவுள் ளதாகவும் தொடர்ந்து அச்சுறுத்தல்கள் வந்திருந்தன.

நான் எழுதியது போல சம்பவத்துடன் தொடர்புபட்ட மரண வீட்டில் நடக்கவில்லை யெனவும் அவையெல்லாம் பொய்யெனவும் மன்னிப்பு கேட்காவிடில் குடும்பத்துடன் கொலை செய்யப்படுவேன் எனவும், அல்லா விடில் சம்பவத்துடன் தொடர்புபட்ட பெண்ணின் கைப்பட 'நீ எழுதியது பொய்' என எழுதுவிப் போம் எனப் பல ஆண்களின் தொலைபேசித் தொல்லைக்கு நான் ஆளாக நேர்ந்தது.

மேற்படி நிகழ்வானது ஒரு சம்பிரதாயம் எனவும் கழட்டு கழட்டென நிகழ்ந்த கட்டாயப் படுத்தலை என்னை விடுங்கோ விடுங்கோ என அழ அழ கழற்றப்பட்ட தாலியால் தனது வாழ் நாளில் மறக்க முடியாத துயராயுள்ளது இதைக் கேட்க ஒருவருமே எனக்கில்லாமல் போய் விட்டார்கள் என சம்பந்தப்பட்ட பெண் என் னிடம் அழுது ஓய்ந்ததும் அடுத்தடுத்த கட்டாயத் திணிப்புக்கள் அவரது வாழ்வில் குறுக் கீடுகள் வந்த பின்னர்தான் மேற்படி விடயத்தை பத்திரிகையில் எழுத வேண்டிய துர்ப்பாக்கியம் நிகழ்ந்தது.

ஒரு ஊடகம் சார்ந்த எனக்கு நான் நேரில் கண்டதை நூற்றிற்கும் மேற்பட்டோர் முன்னி லையில் நிகழ்ந்த கொடுமையை பல வெளி நாட்டவர்களே எதிர்க்கும் அளவிற்கு நடை பெற்ற ஒரு கட்டாயப்பறிப்பை வெளிப்படுத்த வேண்டிய கடமைப்பாடு இருந்தது. நானும் சேர்ந்து பார்த்துவிட்டு பேசாமல் இருந்திருந் தால் உண்மையான ஒரு ஊடகக்காரியாய் இருக்கும் தகுதியை இழந்திருப்பேன்.

எனது கட்டுரையின் நோக்கம் யாரையும் தனிப்பட்ட விதத்தில் தாக்குவதாக இருக்கவில்லை.

'என்ரை தாலியை விடுங்கோ....உங்களுக்கு உங்களுக்கெண்டு வந்தால்தான் என்ரை நிலை விளங்கும்' என கதறக் கதற பறிக்கப்பட்ட கட்டாயப் பறிப்பு இனிமேல் எங்கள் சமூகத்தில் வேண்டாம் என்ற நோக்கிலேயே கட்டுரை அமைந்ததே தவிர மற்றும்படி யாரையும் புண்படுத்தவல்ல. வீட்டுக்குள் இது நிகழ்ந்திருந்தால் பிரச்சினையில்லை ஒரு பொது மண்டபத்தில் பலர் முன்னிலையில் நிகழ்ந்த கொடுமையை எப்படி மறைக்க?

சடங்கு என்ற பெயரில் ஒரு மனிதவுயிரை வதைப்பதையே கண்டிப்பதாய் அமைந்தது. கணவனே இல்லையாம் பின் தாலியை அவன் நெஞ்சில் கழற்றிப் போட்டதும் அவன் உயிர் பிழைப்பானா? அப்படியாயின் கட்டாயப்படுத்தல் அவசியம் என வாதிடலாம்.

இறப்பின் துயரில் இருக்கும் ஒரு பெண் ணின் உணர்வுகள் மதிக்கப்படாமல் மிதிக்கப் படுதலை எதிர்த்துக் கேட்க அன்று அங்கி ருந்த பெண்கள் துணிந்திருந்தால் திருமதி. சுதானந்தன் இப்படியொரு கடிதத்தை எழுதும் நிலை வந்திருக்காது. யேர்மனியில் இருக்கும் திருமதி.சுதானந்தனால் வாசிக்க முடிந்த கட்டுரையை வெளியிட்ட ஒரு பேப்பர் ரின் முகவரி கிடைக்காமல் நான்காவது நபரான திரு. மகேசன் கையில் கவனமாய் கிடைக்கப் பெற்று ஒரு பேப்பர் ருக்கு வந்திருப்பதிலிருந்தே சம்பந்தப்பட்ட பெண்ணின் நிலையை இங்கே மேலதிகமாக விளக்கத் தேவையில்லை.

இவ்விடயத்தில் கொதித்தெழுந்தவர்கள் யாருமே கட்டுரையை முழுமையாக வாசிக் காமல் எனது கட்டுரை பற்றி தொல்லைப்பட் டுக் கொண்டார்கள். மேற்படி கட்டுரையில் சம் பவ இடம் பெயர் முகவரிகள் எதுவும் எழுதப் படவில்லை. கண்ணால் கண்ட ஒரு கட்டாயப் பறிப்புப் பற்றியே குறிப்பிட்டிந்தேன்.

அச்சம்பவத்துடன் தொடர்புடைய நபர் தானென தனது கண்டனத்தை தனது பெயர் முகவரிகளுடன் எழுதியிருக்கும் திருமதி. சுதானந்தன் அவர்களே! சரி நான் எழுதிய சாவுக்குரியவர் உங்கள் கணவராகவே இருக் கட்டும், கட்டாயத்தாலி பறிப்பு உங்களுக்கான தாகவே இருக்கட்டும். அவ்விதமிருப்பின் 24.11.07ல் நடந்த உங்களுடன் தொடர்புபட்ட மரண நிகழ்வில் கதறக்கதறத் தாலி கழற்று விக்கப்பட்டதும், மற்றும் அங்கு நடைபெற்ற தாக நான் குறிப்பிட்ட சம்பவங்கள் யாவுமே உண்மையானவை. அதில் எந்தவித கற்ப னையோ கதைகட்டலோ இல்லை யாவற்றுக் குமான ஆதாரங்கள் சாட்சியங்கள் என்னிடம் இருக்கின்றன.

ஒரு மரண வீட்டில் யார் மீதும் சொந்தப் பிரச்சனையென்று எனக்கு எதுவும் இருக்கவு மில்லை, இருப்பதுமில்லை. எல்லோரும் என க்கு மனிதர்களே. நீங்கள் குறிப்பிடும் அந்த நண்பிகள் யார் என்று தெரியவில்லை.

எனினும் சிலவேளை அப்படி யாராவது இருப்பின் அவர்களுக்குச் சொல்லி விடுங்கள். எங்கிருந்தோவெல்லாம் மரணவீட்டுக்கு வந்த வர்களெல்லாம் எனக்குப் பகைவர்களில்லை நிறைய நண்பர்கள் உறவினர்கள் வந்தார்கள். அவர்கள் யாவரும் வலுக்கட்டாயமாக ஒருவரின் சொந்த விருப்பின்றி தாலி கழற்று வித்ததை கண்ணால் கண்டார்கள். அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன.

சரி நான் எழுதியது பொய்யாக இருந்தால் உங்கள் அனுமதியின்றி உங்கள் வீட்டு மரண நிகழ்வை பகைதீர்க்கும் களமாக பாவித்திருந்தால் தாராளமாக நீங்கள் என்மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாம். உண்மையில் உங்கள் மீது கரிசனை கொண்டவர்கள் சட்டத்தின் முன் என்னை நிறுத்தலாம்.

நான் எழுதிய கட்டுரையின் நோக்கம், ஒரு இழப்பிற்கான விலை இன்னொரு உயிரை வதைத்தல் இல்லை. இனிமேல் சம்பிரதாயம் என்று சொல்லி மனிதரை வதைத்தலை எதிர்த்தலும் இப்படியானதொரு சம்பிரதாயத்தை எம்மிடையே இல்லாது செய்வதுமே.

- சாந்தி ரமேஷ் வவுனியன்

வாசகர் கழகம்

புலம்பெயர் இளைஞர்களும் தமிழ் தேசியமும்

தமிழ் தேசியப் பற்றிலும் இங்கு வாழும் தமிழ் இளையோர்கள் ஆளுமை உள்ளவர் களாக வளர வேண்டும் என்ற ஆவலில் இக்கடிதத்தை வரைகிறேன்.

எமது தமிழ் இளைஞர்களை ஆக்கபூர்வமான வர்களாகவும் தேசியப் பற்றுள்ளவர்களாகவும் உருவாக்குவதற்கு பல நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் இங்கு சொல்லும் வேலைத் திட்டங்கள் ஆவன.

தமிழ் பாடசாலைகள் யாவும் ஒருங்கி ணைப்பட வேண்டும். ஜேர்மன் போன்ற நாடுகளில் தமிழ் ஆலயம் இருப்பது போன்று தமிழ் தேசியப் பாடசாலைகள் அமைக்கப் படவேண்டும்.

இங்கு பிறந்த பிள்ளைகளுக்கு நாம் யார்? எங்கிருந்து வந்தோம், ஏன் நாம் இங்கு வந்தோம், எமது போராட்டம் ஏன் ஆரம்பிக்கப் பட்டது போன்ற விடயங்களை அறிந்து கொள்ளும் வகையில் புத்தகங்கள் எழுதப்பட வேண்டும்.

இங்குள்ள பல இளைஞர்கள் வீட்டுச்சுமை காரணமாக கல்வியை தொடர முடியாமல் முழுநேர வேலையை செய்கிறார்கள். இவர்களுக்கு தொழில் சார்பு வகுப்புப் பட்டறைகள் அமைத்து பல்வேறு தொழில் சார்பு அறிவுகள் ஊட்டப்படல் வேண்டும். அத்துடன் சொந்த வியாபாரம் செய்ய விரும்புபவர்களையும் ஊக்கப்படுத்தி அவர்களுக்கான உதவிகளை செய்தல். நாம் இங்கு பலமான சமுதாயமாக இருந்தால் தான் நம் தமிழீழமும் பலமாக அமையும்.

மாவீரர்களின் கனவும் அதுவே எதிர்கால சந்ததி ஆளுமை உள்ள சமுதாயமாகவும் எல்லோரும் வியந்து பார்க்கக்கூடிய இனமாக வாழ வேண்டும் என்பதே. தேசியத் தலைவரின் கவலையும் புலம்பெயர் வாழும் இளைய சமுதாயம் பற்றியதே.

தமிழ் தேசியம் பேசுபவர்கள் ஒழுங்கான அத்திவாரம் இடாவிட்டால் இங்குள்ள எமது இளையோர் இன அடையாளம் அற்றுப் போவார்கள். இங்குள்ளவர்கள் கோயில் கட்டியும் பரதநாட்டிய அரங்கேற்றங்களை அரங்கேற்றியும் எமது கலை நிகழ்ச்சி களை நடத்தியும் எமது இளையவர்களை தமிழ் பற்றாளர்களாக வளர்த்து விட முடியாது.

இங்கு பிறந்த பிள்ளைகள் தன்னை யார் என்று அடையாளம் காணத் தவறினால் அவர்கள் மேற்கத்திய கலாச்சாரத்தில் மூழ்கி அடையாளம் அற்றுப் போவார்கள்.

- தமிழ் பற்றாளன்

SRI SIVASAKTHI ASTROLOGICAL CENTRE

Pandit Laxsmana Shastry
Specialist Astrologer

அகிலன் எண்டர்பிரைசஸ்
(Near Lakshmis Jewellers)
274 High Street North,
Easthamn, London E12 6SA

Tel: **07939 095 099**
07507 089 785

உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை தீமைகள், பற்றிய விபரங்களைக் கூறுவார்.

இவரை ஒருமுறை சந்தியுங்கள். கைரேகை, பெயர் இராசி, லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல், உத்தியோகம், கல்வி, வியாபாரம், திருமணம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை காதல் கலியாணம், விசா பார்த்து சொல்லப்படும். நிலம், வீடு, யோகம் அதிஸ்ட நம்பர்கள் கோர்ட் வழக்குகள், எதிரிகளினால் மந்திரம், சூனியம், பேய், பிசாசு கண்திருட்டி, பரிகாரம் செய்வார்.

உடன் சந்தியுங்கள்.

Opening Hours; **9.30 am-8.30pm**-7days

He speaks English, Tamil, Telegu, Malayalam, Kannada and Hindi.

அனைத்து தமிழ் உள்ளங்களுக்கும் உளம் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துக்கள்